The Hindu /
தி இந்து தமிழ்

1 NOV 2025

ஆசிய அளவிலான பல்கலைக்கழக தர வரிசையில்

# புதுவை மத்திய பல்கலைக்கழகம் 470-வது இடத்துக்கு முன்னேற்றம்

## தெற்காசிய அளவில் 121-வது இடத்தை பிடித்தது




■ புதுச்சேரி

க்யூஎஸ் ஆசிய பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசை பட்டியலில் புதுவை மத்திய பல்கலைக்கழகம் 470-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. தெற்காசிய அளவில் 121-வது இடத்தை பிடித்துள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு நேற்று வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பு:

ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1,526 கல்வி நிறுவனங்களை க்யூஎஸ் ஆசிய பல்கலைக்கழகம் நடப்பு கல்வியாண்டில் மதிப்பீடு செய்ததில் புதுவைப் பல்கலைக் கழகம் 30.7 என்ற மதிப்பெண் களுடன் 470-வது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த கல்வி யாண்டில் 18.8 மதிப்பெண் பெற்று 501-520 தர வரிசையில் இருந்து இது முன்னேற்ற நிலையாகும். மேலும், தெற்காசிய அளவில் புதுவைப் பல்கலைக் கழகம் 140-வது இடத்தில் இருந்து 121-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கல்வி நற்பெயருக்கான மதிப் பெண் 16.4 இலிருந்து 22.9 ஆக உயர்ந்தது; நிறுவன நற்பெயர் 9.2 இலிருந்து 13.3 ஆக உயர்ந்தது; இது பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

ஆசிரியர் - மாணவர் விகிதம் 8.5 இலிருந்து 15.3 ஆக மேம்பட்டுள்ளது; இது தரமான கல்வியை வழங்கும் பல்கலைக்கழகத்தின் உறுதிப் பாட்டைக் காட்டுகிறது. ஆராய்ச்சி செயல்திறனில் ஆசிரியர் ஒன்றிற்கான ஆய்வுக் கட்டுரைகள் 48.23-ல் இருந்து 76.6 ஆகவும், கட்டுரை ஒன்றிற்கான மேற்கோள்கள் 16.9-ல் இருந்து 19.4 ஆகவும் உயர்ந்துள்ளன. இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி உற்பத்தித்திறன் மற்றும் தாக்கத்தை வலியுறுத்துகிறது.

சர்வதேசமயமாக்கலில் பல் கலைக்கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. சர்வதேச ஆராய்ச்சி வலையமைப்பின் மதிப்பெண் 26.3-ல் இருந்து 77.6 ஆக கூடியுள்ளது; இது உலகளாவிய ஆராய்ச்சி ஒத்துழைப்புகளில் சிறந்த விரிவை காட்டுகிறது. பிஎச்டி பட்டம் பெற்ற ஆசிரியர்களின் விகிதம் 74.5 சதவீதத்தில் இருந்து 97.4 சதவீதமாக உயர்ந் துள்ளது.

உலக அளவில் அங்கீகரிக் கப்பட்ட உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக மாறுவதற்கான பல்கலைக்கழகத்தின் நோக்கத்துடன் இந்த அங்கீகாரம் திகழ்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

Malai Malar /
மாலை மலர்

11 NOV 2025

ஆசிய அளவிலான தர வரிசை பட்டியலில்

# புதுவை பல்கலைக்கழகம் முன்னேற்றம்

புதுச்சேரி நவ 11–

ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1526 கல்வி நிறுவனங்களை க்யூ.எஸ். ஆசிய பல்கலைக்கழகம் நடப்பு கல்வி ஆண்டில் மதிப்பீடு செய்ததில் புதுவை பல்கலைக் கழகம் 30.7 என்ற மதிப்பெண்களுடன் 470–வது இடத்தை பெற்றுள்ளது.

கடந்த கல்வி ஆண்டில் 18.8 மதிப்பெண் பெற்று 501–520 தர வரிசையில் இருந்து இது முன்னேற்ற நிலையாகும். மேலும், தெற்காசிய அளவில் புதுவை பல்கலைக் கழகம் 140–வது இடத்தில் இருந்து 121–வது இடத்துக்கு முன்னேற்றியுள்ளது. இந்த தகவலை மத்திய பல்கலைக் கழகம் துணைவேந்தர் பிரகாஷ் பாபு தெரிவித்துள்ளார். மேலும் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக மாறுவதற்கான பல்கலைக் கழகத்தின் நோக்கத்துடன் இந்த அங்கீகாரம் திகழ்கிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Daily Thanthi / தினத்தந்தி

11 NOV 2025

ஆசிய தரவரிசை பட்டியல் வெளியீடு:

# புதுவை பல்கலைக்கழகத்துக்கு 470-வது இடம்

புதுச்சேரி, நவ.11-

சர்வதேச நிறுவனமான குவாக்கரல்லி சிமண்ட்ஸ் ஆசிய பல்கலைக்கழகம் 2025-26-ம் கல்வி ஆண்டுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் ஆசியாவை சேர்ந்த 48 நாடுகளில் இருந்து 1,526 கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. அதில், சர்வதேச அளவில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 30.7 மதிப்பெண்களுடன் 470-வது இடத்தை பிடித்துள்ளது. கடந்த கல்வியாண்டில் (2024-25) 18.8 மதிப்பெண்களுடன் 501-வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தெற்காசியாவில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 140-வது இடத்தில் இருந்து 121-வது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

இது புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கற்பித்தல், ஆராய்ச்சி மேம்பாட்டினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இந்த சாதனைக்கு பங்காற்றிய ஆசிரியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு வாழ்த்து தெரிவித்தார்.

இந்த தகவலை பல்கலைக்கழக துணை பதிவாளர் மகேஷ் தெரிவித்துள்ளார்.

Dinamani / தினமணி

11 NOV 2025

# ஆசிய பல்கலை. தரவரிசை: புதுவைப் பல்கலை. முன்னேற்றம்

புதுச்சேரி, நவ.10: புதுவை மத்திய பல்கலைக் கழகம் க்யூ.எஸ். ஆசிய பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் முன்னேறியுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி கி.மகேஷ் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு

ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1,526 கல்வி நிறு வனங்களை க்யூஎஸ் ஆசிய பல்கலைக்கழகம் மதிப்பீடு செய்ததில் புதுவைப் பல்கலைக் கழகம் 30.7 மதிப்பெண்களுடன் 470-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2025-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 18.8 மதிப்பெண் பெற்று 501-520 தர வரிசை யில் இருந்து இது முன்னேற்ற நிலையாகும். மேலும், தெற்காசியாவில் புதுவைப் பல்க லைக்கழகம் 140-வது இடத்தில் இருந்து 121-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக மாறுவ தற்கான பல்கலைக்கழகத்தின் நோக்கத்துடன் இந்த அங்கீகாரம் திகழ்கிறது. மேலும், இந்தச் சாதனை குறித்து புதுவைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பி. பிரகாஷ் பாபு மகிழ்ச்சித் தெரிவித்துள்ளார்.

Dinakaran / தினகரன்

1 1 NOV 2025

ஆசிய பல்கலைக்கழக தரவரிசையில்

# புதுவை பல்கலைக்கழகத்துக்கு 470வது இடம்

புதுச்சேரி, நவ. 11: புதுவை பல்கலைக்கழக துணை பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுவைப்பல்கலைக்கழகம், க்யூஎஸ் ஆசிய பல்கலைக்கழக தரவரிசை 2026ல் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. 48 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1,526 நிறுவனங்களில் மதிப்பிடப்பட்டதில், புதுவை பல்கலைக்கழகம் 30.7 என்ற ஒட்டுமொத்த மதிப்பெண்களுடன் 470வது இடத்தைப் பிடித்துள்ளது. 2025ம் ஆண்டில் 501லிருந்து 520 தரவரிசையில் இருந்த நிலையில் இது ஒரு முக்கிய முன்னேற்றமாகும். இதன் மூலம் கல்வி சிறப்பு, ஆராய்ச்சி திறன் மற்றும் சர்வதேச ஈடுபாட்டில் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து முன்னேற்றம் வலியுறுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் மொத்த மதிப்பெண் 2025ம் ஆண்டில் இருந்த 18.8 இலிருந்து 2026ஆம் ஆண்டில் 30.7 ஆக உயர்ந்துள்ளது. இது பல செயல்திறன் குறிகாட்டிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. தெற்காசியாவில் புதுவை பல்கலைக்கழகம் 140வது இடத்திலிருந்து 121வது இடத்துக்கு முன்னேறியுள்ளது கல்வி சிறப்பை உறுதிப்படுத்துகிறது. இது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக மாறுவதற்கான பல்கலைக்கழகத்தின் நோக்குடன் இணைந்து நிற்கிறது. புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, இந்த சாதனை குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததுடன், ஆசிரியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளை பாராட்டிய அவர், புதுவைப் பல்கலைக்கழகத்தின் நிலையை மேலும் உயர்த்தும் நோக்கில், புதிய உற்சாகத்துடனும் உறுதியான அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து இயங்குமாறு ஊக்கமளித்தார். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

Dinamalar / தினமலர்

11 NOV 2025

# புதுச்சேரி பல்கலை தர வரிசை பட்டியலில் முன்னேற்றம்

**புதுச்சேரி, நவ.11–** ஆசிய அளவில் பல்கலைக்கழகங்களில், ஆராய்ச்சி திறன் மற்றும் சர்வதேச ஈடுபாடு, 2026 ஆண்டுக்கான தரவரிசையில் புதுச்சேரி பல்கலைக்கழகம், முன்னேறியுள்ளது.

இந்த தரவரிசை, கல்வி சார் நற்பெயர், பணி ஆராய்ச்சி திறன் மற்றும் சர்வதேச ஈடுபாடு, ஆசிரியர்கள், மாணவர்களின் விகிதம் உள்ளிட்ட அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்பட்டு ஒவ்வொருஆண்டும்தரவரிசை வெளியிட்டு வருகிறது.

ஆசிய நாடுகளை சேர்ந்த ஆயிரத்து 526 பல்கலைக்கழகங்களில், புதுச்சேரி பல்கலைக்கழகம் 30.7 மதிப்பெண்கள் பெற்று, 2026ம் ஆண்டிற்கான தரிவரிசையில், 470வது இடத்தை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு 18.8 மதிப்பெண்களுடன் 520 தரவரிசையில் இருந்து முன்னேற்றம் அடைந்துள்ளது.

அதே போல, தெற்காசியாவில் தரவரிசையில் 140வது இடத்தில் இருந்து 121வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இதற்கான அர்ப்பணிப்பு மற்றும் பங்களித்த ஆசிரியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களை, பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு பாராட்டினார்.

இத்தகவலை பல்கலை துணைப் பதிவாளர் மகேஷ் தெரிவித்துள்ளார்.